சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 302 / 2019

பெயர்　　சதீஸ்குமார்　　ம.சா.2　　20.07.2023.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தேன். விபத்தில் இறந்து போன நபர் எனக்கு முன்னால் இருச்சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். எனக்கும் அவருக்கும் இடையே 10 அடி தூரம் இருக்கும். இறந்துபோன நபர் இருச்சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்தார் அப்போது அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபரின் கண்ணில் பூச்சி விழுந்ததால் இருச்சக்கர வாகனம் கீழே விழுந்தது. அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவருக்கு காயம் ஏற்படவில்லை. நான் அவர்கள் விழும் போதே நான் பார்த்தேன். இந்த விபத்து சம்பந்தமாக நான் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. நான் இந்த விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளித்துள்ளேன். இறந்து போன நபரின் தலை சாலையில் மோதியதால் தான் இறந்து போனார் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் / சதீஸ்குமார்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.